# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம்

---

*[1982, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1982, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : 50*

# 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம்

[1982, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 60/81
1477

## இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**165 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறன (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இருபது சதவீதத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நாற்பத்தொன்பது சதவீதத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திநான்காம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் மாற்றீடு செய்யப்பட்டவாறன, முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (vii) ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(vii) இலங்கையிலுள்ள தனியார் துறைசார் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக முயற்சிகளுக்கு முகாமைத்துவ, தொழினுட்ப, நிருவாக ஆலோசனை போன்ற அத்தகைய சேவைகளையும் வணிக வங்கித்தொழிற் சேவைகளையும் அளித்தலும் முகாமைத்துவ, தொழினுட்ப, நிருவாக சேவைகளையும் வணிக வங்கித் தொழிற் சேவைகளையும் பெற்றுக்கொள்வதில் அவற்றிற்கு உதவியளித்தலும்;".

(2) அப்பிரிவின் (xv) ஆம், (xvi) ஆம் பந்திகளை முறையே (xxi) ஆம், (xxii) ஆம் பந்திகளாக மீள இலக்கமிடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (xiv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(xv) தொகுதிக்கடன்களை வழங்குதலும், பணிப்பாளர்கள் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய தொகையிலும் அத்தகைய காலப்பகுதிக்கும் எவரேனும் ஆளிடமிருந்து நிலையான வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதலும்;

எ 65471—6,950 (08/82)

(xvi) அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும், உதவிசெய்வதற்கென துணைநிலைக் கம்பெனிகளைத் தாபித்தலும் ;

(xvii) அங்கீகரிக்கப்பட்ட கடன் நிறுவனங்களுடனான கடன்களிலும், ஒப்புரவு மூலதனங்களிலும், கீழ்வரைதல் ஒழுங்குகளிலும், உத்தரவாதங்களிலும் பங்குபற்றுதல் ;

(xviii) குதங்களையும், கிட்டங்கிகளையும், களஞ்சியங்களையும், கட்டிடங்களையும், எந்திரத்தொகுதியையும், சாதனங்களையும் வேறு பொருட்களையும் குத்தகைக்குவிடுதல், வாடகைக்குக் கொடுத்தல், முழுமையாக விற்றல், அல்லது கேள்வுக் கொள்வனவு அடிப்படையில் விற்றல் ;

(xix) அதனது கடன்கள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் கைத்தொழில், கமத்தொழில், அல்லது வர்த்தக முயற்சிகளாக மாற்றுவதற்கும் அத்துடன் சபைகளுக்கான அல்லது அத்தகைய ஏதேனும் முயற்சியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களுக்கான ஒப்பப்பணங்களை ஒப்புரவு மூலதனமாக மாற்றுதல் ;

(xx) கூட்டுத்தாபனம் நிறைவேற்றக்கூடிய பணிகளுக்குப் பிரதிபலனாக, பணிப்பாளர் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தரகை, தரகுக் கூலியை, வட்டியை, ஊதியத்தை அல்லது கட்டணத்தைப் பெறுதல் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(1) கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஒவ்வொன்றும் நூறு ரூபா கொண்ட முப்பது இலட்சம் சாதாரண பங்குகளாகப் பிரிக்கப்பட்ட முப்பது கோடி ரூபாவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் மாற்றீடுசெய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர், எவரேனும் ஆளை (இதனகத்துப்பின்னர் "அரசாங்கப் பணிப்பாளர்" என்றழைக்கப்படும்) கூட்டுத்தாபனப் பணிப்பாளர் ஒருவராக காலத்திற்குக் காலம் நியமிக்கவும், அத்தகைய ஆளைப் பதவியிலிருந்து அகற்றவும், பதவிதுறப்பின் மூலமாகவோ அல்லது இறப்பின்மூலமாகவோ அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்

மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ அத்தகைய பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுவதன்மேல் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கும் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கவும் உரித்துடையவராதல் வேண்டும். அரசாங்கப் பணிப்பாளரானவர் அத்தகைய அமைச்சர் மூலமாகவன்றி, சுற்றுவரிசை முறைப்படி ஓய்வுபெறுவதற்கு அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு ஆளாகார் என்பதுடன், எவையேனும் தகைமைப் பங்குகளை வைத்திருக்கும்படி பிணிக்கப்பட்டவராதலும் ஆகாது. முற்சொல்லப்பட்டதற்கமைவாக, அரசாங்கப் பணிப்பாளரானவர், கூட்டுத்தாபனத்தின் வேறு எவரேனும் பணிப்பாளருக்குள்ளவை போன்ற அதே உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், அதே கடப்பாடுகளுக்கு அமைந்தவராதலும் வேண்டும்.';

(2) அப்பிரிவில் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(4) அப்போதைக்கு கூட்டுத்தாபன பொது முகாமையாளர் பதவியை வகிப்பவர், வாக்களிக்கும் உரிமையற்றவரான கூட்டுத்தாபனத்தின் பதவிவழிப் பணிப்பாளர் ஒருவராகவிருத்தல் வேண்டும். பதவிவழி பணிப்பாளரானவர், தகைமைப் பங்குகள் எவற்றையும் வைத்திருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதலாகாது." ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும். பங்குதாரர்—பணிப்பாளர் எவரும் எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு தொடர்ச்சியான காலப்பகுதிக்குப் பதவி வகித்தலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) அரசாங்கத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கடன் எதுவும் நிலுவையாகவிருக்குமட்டில், கூட்டுத்தாபனமானது அவ்வாண்டுக்கான கூட்டுத்தாபன நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபத்தின் இருபது சதவீதத்திற்குக் குறையாத தொகைக்குச் சமமான பணத் தொகையை (ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை, அப்போது நிலுவையாகவுள்ள அரசாங்கக் கடன்தொகைக்குச் சமமாக வருகின்றவரையில்) சிறப்பொதுக்கு நிதியம் ஒன்றில் ஒவ்வோராண்டிலும் ஒதுக்கிவைத்தல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் மாற்றீடு செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எழுநூற்று இருபது இலட்சம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முந்நூறு கோடி ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.